# கலைக் கல்வியில் முதலீடு தொடரும்: லாரன்ஸ் வோங் உறுதி

படைப்பாற்றல் துறை நிபுணர்களுக்குத் தேவை அதிகமாகி இருக்கிறது. அந்தத் தேவையை நிறைவேற்றும் வகையில் கலைக் கல்வியில் சிங்கப்பூர் தொடர்ந்து முதலீடு செய்யும் என்று துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங் தெரிவித்துள்ளார்.

தங்களுடைய நாட்டங்கள், ஆற்றல்கள் அடிப்படையில் உன்னத நிலையை எட்ட மக்களுக்குப் பன்மய வழிகளை ஏற்படுத்தித் தருவதும் அதன் நோக்கம் என்று அவர் குறிப்பிட்டார்.

நன்யாங் நுண்கலைக் கழகத்தின் 85வது ஆண்டுவிழாவைக் குறிக்கும் வகையில் சனிக்கிழமை நிதி திரட்டும் விருந்து நிகழ்ச்சி நடந்தது.

அதில் கலந்துகொண்டு பேசிய திரு வோங், அரசாங்கம் பல ஆண்டுகளாக கலைகளில் அதிகமான தொகையை முதலீடு செய்து வந்துள்ளதாகக் கூறினார்.

புதிய சிங்கப்பூர் கலைப் பல்கலைக்கழகம் 2024 ஆகஸ்டில் திறக்கப்பட இருப்பதை அவர் சுட்டினார். அதில் சேர 2023 மூன்றாவது காலாண்டில் இருந்து விண்ணப்பிக்கலாம். சிங்கப்பூரில் கலைகளைப் பலப்படுத்துவதற்கான மேலும் பல வழிகளைத் தொடர்ந்து ஆராய்வோம் என்றும் திரு வோங் கூறினார்.

> கலையும் கலாசாரமும் இப்போது சிங்கப்பூரர்களுக்கே உரிய தனிப்பட்ட கலாசாரமாகவும் அடையாளமாகவும் திகழ்கின்றன.
>
> **துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங்**

சிங்கப்பூர் கலைஞர்களுக்குச் சிறந்த ஆதரவை அளிப்பது, கலைகளை எட்டுவதற்கான வாய்ப்புகளை மேம்படுத்துவது ஆகியவை அவற்றில் அடங்கும்.

கலையும் கலாசாரமும் இப்போது சிங்கப்பூரர்களுக்கே உரிய தனிப்பட்ட கலாசாரமாகவும் அடையாளமாகவும் திகழ்வதாக துணைப் பிரதமர் குறிப்பிட்டார்.

கேப்பெல்லா சிங்கப்பூரில் நடந்த அந்த நிகழ்ச்சியில் 300 பேர் கலந்துகொண்டனர்.

சிங்கப்பூரின் கலைகளை, தென்கிழக்கு ஆசியாவின் கலைகளை உலகிற்கு எடுத்துக்காட்டுவதில் நன்யாங் நுண்கலைக் கழகம் முக்கியப் பணி ஆற்றி இருப்பதாக திரு வோங் கூறினார்.